மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 667/2022 |
| பெயர் | : | பொன்ராஜ் (PW4) |
| த/பெ. | : | சுப்பிரமணியன் |
| வயது | : | 45 |
| கிராமம் | : | மகாராஜாநகர் எ.ஆர் லைன் |
| தாலுகா | : | பாளையங்கோட்டை |
| மாவட்டம் | | திருநெல்வேலி |
| Calling | : | காவல் ஆய்வாளர் |

(A1 Manikandan A2 Murugan A3 Selvakumar A4 Thachanamoorthy are present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

<u>**முதல் விசாரணை**</u>

1)நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சுகிராமம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2017 ஆம் தேதி புதியம்புத்தூர் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தபோது அன்றைய தினம் தலைமை காவலர் முத்துகிருஷ்ணன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த புதியம்புத்தூர் காவல்நிலைய குற்ற எண் 124/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் படியான வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.06.2017 ஆம் தேதி காலை 6 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலமுருகன் மற்றும் தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன்.**(மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் பாலமுருகன், தங்கவேல், வீரமணிகண்டன், அரியநாயகம், மல்லிகா, இசக்கி , சுப்பனன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் முத்துகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் எனது புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்தநிலையில் கடந்த 19.06.2017 ஆம் தேதி 11.30 மணிக்கு புதூர் பாண்டியாபுரம் பஸ்ஸ்டாப்பில் வைத்து எதிரிகள் நான்கு பேரையும் காரணம் கூறி

கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் அ.சா1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேஷ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். பின்பு எனது விசாரணை முடித்து 25.01.2018 ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் படி தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) அ.சா.1 வீரமணிகண்டன் என்பவர் மருத்துவமனையில் வைத்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேடு நகலில் காயம்பட்ட அ.சா.1 மருத்துவரிடம் இரண்டு தெரிந்த பெண்கள் மற்றும் 13 தெரிந்த ஆண்கள் சேர்ந்து கம்பு , கம்பி, செங்கல் கொண்டு தாக்கி காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் நான்கு நபர்கள் அடித்து காயப்படுத்தியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் பதற்றத்தில் மருத்துவரிடம் அவ்வாறு கூறியதாக கூறியுள்ளார். எனது விசாரணையிலும் அவ்வாறு தான் கூறியுள்ளார். சம்பவத்திற்கு பயன்படுத்திய கல்லை நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) சாட்சி சுப்பனன் வீடு இருப்பதாக பார்வை மகசரில் துலங்காது. சம்பவ இடத்திற்கு சுப்பனன் அன்றைய தினம் எதற்காக சென்றார் என்று எனது விசாரணையில் துலங்காது. அ.சா.2 அரியநாயகம் மற்றும் சாட்சி மல்லிகா ஆகியோர் அ.சா.1ன் பெற்றோர் என்றால் சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள வீடுகளில் வசிப்பவர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள பேச்சிமுத்து மற்றும் உலகநாதபிள்ளை ஆகியோர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் பேச்சிமுத்து மற்றும் உலகநாதபிள்ளை ஆகியோர்களை விசாரித்தால் இந்த வழக்கு பொய்யானது என்று தெரிந்துவிடும் என்பதால் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கல்லை வைத்து தாக்கியிருந்தால் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று கல்லை கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல.

3) நான் சொன்ன நாள் நேரத்தில் விதத்தில் தலைமை காவலர் முத்துகிருஷ்ணன் என்பவர் அ.சா.1 யிடமிருந்து புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றும் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யவில்லை என்றும் நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றும் சம்பவ இடம் செல்லாமல் காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றும் எதிரிகளை விசாரணைக்கு என்று காவல்நிலையம் வரவைத்து கைது செய்துள்ளேன் என்றும் ஒரு தலைபட்சமாக விசாரணை மேற்கொண்டு எதிரிகளுக்கு எதிராக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/—திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.